# கோவை மண்டலத்தில் காஸா கிராண்டே துவக்கம்

கோவை, பிப்.10

சென்னையின் முன்னணி ரியல் எஸ்டேட் நிறுவனங்களில் ஒன்றான காஸா கிராண்டே பிரைவேட் லிமிடெட், உத்தேசிக்கப்பட்டுள்ள தனித்துவம் வாய்ந்த வில்லா திட்டம் மூலம் தொழில் நகரமான கோம்புத்தூரில் அடியெடுக்கு வைக்கிறது.

கோயம்புத்தூரில் அடியெடுத்து வைப்பது குறித்து நிர்வாக இயக்குநர் அருண்குமார் கூறுகையில், கட்டட விருப்பங்களில் எப்போதும் நம்பிக்கை கொண்டுள்ள காஸா கிராண்டே, தரமான வாழ்விடம், வெளிப்படையாக, நேர்மையாக இருத்தல், ஆர்வத்துடன் சிறப்பாகச் செயல்படுத்துதல் ஆகியவை மூலம் அந்த விருப்பங்களை நிறைவேற்றித் தருகிறது. சென்னையில் வெற்றிகரமான திட்டங்களுக்குப் பின்னர். வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவை அளிக்க எங்களது அடுத்த வாய்ப்பாக கோயம்புத்தூர் அமைந்தது. நாங்கள் 2012-2013 நிதியாண்டுக்கு இந்த மண்டலத்தில் ரூ.50 கோடி மற்றும் அடுத்த சில ஆண்டுகளில் 200 கோடிக்கும் அதிகமான திட்டங்களுடன் விற்றுமுதலுக்கு (டர்ன் ஓவர்) இலக்கு வைத்துள்ளோம் என்றார்.

5 ஏக்கரில் அமையவுள்ள இந்த உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டம் 3 பெட்ரூம்களை கொண்ட 90 பாதி தனி வில்லா மற்றும் 4 பெட்ரூம்களை கொண்ட தனி வில்லாக்களை உள்ளடக்கியது. 1600 சதுர அடி முதல் 2000 சதுர அடி வரை கொண்ட இந்த வில்லாக்களின் விலை ரூ.50 லட்சம் முதல் 70 லட்சம். பசுமையான பிரதேசத்துக்கு மத்தியில் அமையவுள்ள இந்த திட்டம், களாபட்டி குரும்பாளையம் சாலையில் உள்ள ஏர்போர்ட் ஜங்சனில் இருந்து 7 கி.மீ. தொலையில் அவினாசி சாலையில் அமைந்துள்ளது. நீச்சல் குளத்துடன் கூடிய கிளப் ஹவுஸ், விருந்தினர் அறைகள், ஹெல்த் கிளப், உள்நாட்டு உள்கட்டமைப்புக் கலை போன்றவையும் இதில் அமையவுள்ளன.